REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 10உ வியாழன் (21—2—57) ★ ★ வெளியூர்: மாசி 11உ வெள்ளி (22—2—57) [இதழ் 219

தஞ்சை மாவட்டத்தில் இயற்கை வாயு!

★

தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலூகாவைச் சேர்ந்த நெய்பட்டூர், மங்கமடம் கிராமங்களில் 60 முதல் 70 சதவிகிதம்வரை 'மீதேன்' எனும் ஒருவகையான வாயு கலந்த இயற்கை வாயு காணப்படுவதாகவும், இந்த 'மீதேன்' வாயு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட உதவும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

'பஞ்சசீலப் பண்டிதர்' ஆட்சியில்....

நாக விடுதலை வீரர்களை பூண்டோடு ஒழிக்க முயற்சி?

இராணுவத்திற்கு முழு அதிகாரமும் அளிக்கப்படுகிறது

தங்கு தடையின்றி 'மனித வேட்டை' நடைபெறும்?

ஜோர்ஹத் (அசாம்), பிப்.—

நாக விடுதலைப் போராட்ட வீரர்களைப் பூண்டோடு அழிப்பதற்காக 'பஞ்சசீல'ப் பண்டிதர் ஆட்சியில், இராணுவத்திற்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

கடந்த வாரத்தில், வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் இராணுவத்தினர் மேற்கொண்ட மிருகத்தனமான நடவடிக்கைகள்கூட, நாகர்களில் தீவிரவாதிகளாயுள்ள விடுதலை விரும்பிகளை அழிக்க முடியவில்லை என்றும், அவர்களது கிளர்ச்சிகளை அடக்க முடியவில்லை என்றும், அதனால்தான் தங்களிஷ்டம் போல எந்த வகையான அடக்குமுறை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்று பஞ்சசீலப் பண்டிதர்கள், இராணுவத்திற்கு சகல அதிகாரங்களும் அளித்திருப்பதாகத் தெரியவருகிறது.

நாகமலைப் பிரதேசங்களில் இன்றுமுதல் (பிப். 21) இராணுவம் தனது நடவடிக்கைகளை இஷ்டம்போல் தீவிரமாக்கிக் கொண்டு, நாக விடுதலை வீரர்களைக் கொன்று குவிக்கும் வேட்டையில் தங்குதடையின்றி ஈடுபடும் என்றும் தெரியவருகிறது.

தங்கவயல் காங்கிரசார் 500 பேர் கட்சிக்குத் 'தலைமுழுக்கு'

ராபர்ட்சன்பேட்டை, பிப். 20—

கரைந்துவரும் காங்கிரசிலிருந்து வெளியேறுவோர் தொகை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது!

இங்கு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் எம். சி. பெருமாள் என்பவர் காங்கிரசிலிருந்து விலகியதை ஒட்டி, 500 காங்கிரஸ்காரர்கள் விலகிவிட்டனர் என்று தெரியவருகிறது.

காங்கிரசில் கோஷ்டிச் சண்டைகள் மலிந்து விட்டதாகவும், வகுப்புவாதிகள் நிரம்பிவிட்டதாகவும் கூறி, பெருமாள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேபருக்கு தனது இராஜிநாமாக் கடிதத்தை அனுப்பியுள்ளார் என்று தெரியவருகிறது.

சென்னை சர்க்கார் ஊழியர்களுக்கு டெல்லி கைவிரிப்பு!

டி. டி. கிருஷ்ணமாச்சாரி தந்த உறுதிமொழி என்ன ஆயிற்று?

வழக்கம்போல உதவி எதிர்பார்த்து ஏமாந்தது சென்னை சர்க்கார்?

மாநில சர்க்காரில் குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுகோரி, திட்டம் ஒன்றை மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்திருந்தனர், சென்னை சர்க்கார்.

வழக்கம்போலவே மத்திய சர்க்கார், இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றுகூறி, சென்னை சர்க்காரின் கோரிக்கைக்குக் கைவிரித்துவிட்டிருக்கிறது.

சென்னை சர்க்காரைப் போலவே மற்றும் பல மாநில சர்க்கார்களும் தங்கள் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தருவதுபற்றித் திட்டங்கள் அனுப்பியிருந்தன—மத்திய சர்க்காருக்கு. மாநில அரசுகள் அனுப்பியிருந்த திட்டங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று வேறுபாடு—முரண்பாடு கொண்டதாக இருக்கின்றது என்ற காரணத்தால், மத்திய சர்க்கார், இத்திட்டத்தையே மீண்டும் ஒருமுறை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதென முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

ஊதிய உயர்வு தருவதினால் ஏற்படும் அதிகப்படியான செலவில் ஒரு குறிப்பிட்ட பெரும் பகுதியை மத்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையின் மீதே, மாநில சர்க்கார்கள் இத்திட்டத்தைத் தயாரித்து அனுப்பியிருந்தனவாம்.

ஆனால் இப்போது மத்திய சர்க்கார் கூறுவதெல்லாம், இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் கொஞ்ச காலத்திற்கு, அதனால் ஏற்படும் செலவில் ஓரளவு தொகையை தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், அக்காலவரம்பிற்குப் பிறகு, இந்த நிதிப் பொறுப்புகள் அனைத்தையும் மாநில சர்க்காரே முழுதுமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான்.

இப்போது ஒவ்வொரு மாநில அரசும், தங்களது ஊழியர்களுக்குத் தரப்படவேண்டுமென்று கருதுகிற ஊதிய உயர்வின் அளவு குறித்து மத்திய சர்க்காருக்குத் தகவல் தெரிவிக்குமாறு கோரப்படலாம் என்றும், அதன் அடிப்படையிலேயே அந்தந்த மாநில அரசுக்கு மத்திய சர்க்கார் தரக்கூடிய உதவியின் அளவு முறை ஆகியவை நிர்ணயிக்கப்படும் என்றும் தெரிகிறது.

'இறுதி நிமிட' கோரிக்கை!

"சென்னை மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு ஒரு இடைக்கால நிவாரணமாக, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுவது போன்று அலவன்சுகள் தரப்பட வேண்டும் என்ற தங்கள் கோரிக்கைக்கு, வருகிற 25-ந் தேதிக்குள் கண்டிப்பாக சர்க்கார் அதிகாரபூர்வமாகப் பதில் தந்தாக வேண்டும். இதுவே எங்கள் 'இறுதி நிமிட' கோரிக்கை"

என்று, சென்னை மாநில சர்க்கார் காரியாலய ஊழியர் சங்கம் இறுதி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கோரிக்கை புறக்கணிக்கப்பட்டால்...!

"இந்த எங்கள் கோரிக்கை கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுமானால் மாநில என். ஜீ. ஓ. சங்கம் ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி, வருகிற 26-ந் தேதி முதல் மார்ச் 15-ந் தேதி வரை எங்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் துக்கதினம் கொண்டாடுவோம்"

என்றும், அவர்கள் தங்கள் இறுதிக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அந்தக் கூட்டத்தில், இந்தமாதம் இறுதிக்குள், அப்போதிருக்கிற நிலைமைகளையொட்டி மேற்கொண்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க ஒரு அவசரக்கூட்டம் கூட்ட வேண்டுமெனவும், இதனிடையில், மாநில என். ஜி. ஓ.-க்களின் குறைகளை மீண்டும் ஒருமுறை பிரதமர் நேரு, மத்திய நிதி அமைச்சர், மாநில முதலமைச்சர், நிதி அமைச்சர் ஆகியோருக்கு தந்தி மூலம் தெரிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

'எதிர்க் கட்சியினருக்கே வாக்களியுங்கள்'

'அதிலும் யோக்கியர்களுக்கே ஓட்டு அளியுங்கள்'

மக்களுக்கு ஜெயப்பிரகாஷ் வேண்டுகோள்

நாகபுரி, பிப். 20—

"கடந்த 10 ஆண்டுகளாகக் காங்கிரஸ், ஆளும் கட்சியாகக் கேள்வி கேட்பாரற்ற வகையில் முழு அதிகாரம் படைத்திருந்தது. இந்த நிலை முறியடிக்கப்பட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இது முறியடிக்கப்படாவிட்டால் ஜனநாயகத்திற்கும் மக்களின் நலனுக்கும் பெரும் தீங்கு ஏற்படும் என்பதுடன், நல்ல சர்க்காரும் அமையாது"

என்று, ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"எனவே, மக்கள் இந்தத் தேர்தலில் பொதுவாக எதிர்க் கட்சியினருக்கே வாக்களிக்க வேண்டும்; வாக்களிப்பதற்கு முன்னால், இப்போதுள்ள பிரச்சினைகளை எல்லாம் நன்கு சிந்தித்து விருப்பு, வெறுப்பு, அச்சம் இவற்றிற்கு ஆளாகிவிடாமல், விவேகமுடன் வாக்களிக்க வேண்டுகிறேன்" என்றும் ஜெயப்பிரகாஷ் கூறியிருக்கிறார்.

உண்மைதான்

"எண்ணற்ற கட்சிகள் இருப்பது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது என்பது உண்மைதான்.

"ஆனால், இதற்குப் பரிகாரம் ஒரு கட்சி ஆட்சியல்ல! குழப்பங்கள் ஏற்படும் என்று கருதி, ஆளும் கட்சியையே தேர்ந்தெடுப்பது, மக்கள் அரசியலில் வளர்ச்சி பெறுவதைத் தடுப்பதாகும்"

என்றும் ஜெயப்பிரகாஷ் கூறியிருக்கிறார்.

யோக்கியர்களையே தேர்ந்தெடுங்கள்

"வாக்காளர்கள் யோக்கியர்களுக்கே வாக்களிக்க வேண்டும். சந்தேகமான நடத்தையுடையவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது. ஒரு குறிப்பிட்ட தொகுதியில் யோக்கியர்களே இல்லை என்ற நிலை இருந்தால், மக்கள் வாக்களிக்காமலிருந்துவிடுவதே நலம்" என்றும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறியுள்ளார்.

கேரளத்தில் 6 புதிய தொழிற்சாலைகள்

படித்தும் வேலையற்றிருப்போர் துயரைப்போக்கத் திட்டம்

படித்தும் வேலையின்றிருப்போரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக 6 தொழிற்சாலைகளை கேரளத்தில் அமைத்து நடத்தும் ஒரு புதிய திட்டத்திற்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியுள்ளதாம்.

வேலையின் துவக்கக் காலத்தில் மெட்ரிகுலேஷன் படித்த 400 மாணவர்களுக்கு இத்தொழிற்சாலைகள் வேலைதரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் மொத்த மூலதன முதலீட்டில் இரயில்வேக்களின் பங்கு மட்டும் சுமார் ரூ. 974 கோடியாம்!

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 21—2—57 வியாழன்

பஞ்சாப் ஆட்சியும்— பச்சைத்தமிழர் ஆட்சியும்!

இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 3,000.

உழைக்க முடியாது உருக் குலைந்தவர்களுக்கு ரூ. 1,500.

சாதாரணமாகக் குண்டடி பட்டவர்களுக்கு ரூ. 500.

இப்படி உதவித் தொகை தரப்பட இருக்கிறது.

போலீசுப் படையினரின் துப்பாக்கிக் குண்டடியில் சிக்கி, தங்கள் ஆட்சியில் உயிர்நீத்தவர்கள் குடும்பத்திற்கும் உறுப்பை இழந்தவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்குந்தான் இப்படி மூவகையான பண உதவியைத் தர காங்கிரசு அரசாங்கம் முன்வந்து இருக்கிறது.

இதை அறிய வருகிற எவரும், வாழ்க்கையைப் பெருஞ் சுமையாகக் கருதி வாழ்ந்து வருகின்ற பலரும், வேலையின்றி வேதனையில் மூழ்கிக் கிடப்போர் அனைவரும், 'இப்படி ஒரு வாய்ப்பு தங்களுக்கும் நேராதா? நேர்ந்தாலாவது அரசாங்கப் பண உதவி பெற்று சில நாளைக்காவது கவலையற்று வாழ்க்கையை நடத்திவரலாமே' என எண்ணிடத்தான் செய்வர். அவ்வாறு எண்ணுவதுடன் நின்றுவிடாது, அத்தகு அரிய வாய்ப்பைத் தாங்களாக உருவாக்கிக்கொண்டு, அதற்குத் தங்களை ஒப்படைத்துக்கொள்ள துணிந்து முன்வரவுங்கூடும். அதுபோன்று சிலர் முன்வருவதும் இந்தக் காங்கிரசு ஆட்சியில் வியப்புக்குரியதும் அல்ல— எதிர்பார்க்கக் கூடாததுமல்ல.

'தங்கள் ஆட்சியில், தங்கள் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட வெறிச் செயலில் சிக்கி சிவனிழந்தவர்களுக்கும், சிரழிந்து கிடப்பவர்களுக்கும் பண உதவி செய்ய, பெரும் கருணையுடன் முன்வந்து இருக்கும் பச்சைத் தமிழர் ஆட்சியை, சிலர் பரிகாசம் செய்கிறார்களே, தேர்தலில் அவரைத் தோற்கடிக்க முன் வருகிறார்களே, என்னே நன்றி கொன்ற செயல்! இப்படி எதிர்க்க முன்வருகிறவர்களும் மனிதர்களா? அவர்களை ஒருகை பார்த்துவிடுகிறேன், ஒழித்துக் கட்டி விடுகிறேன்' என்றெல்லாம் சிலர் கொக்கரிக்கக்கூடும்.

'தம் ஆட்சியில் உள்ள அதிகாரிகள்தானே துப்பாக்கியால் சுட்டு இருக்கிறார்கள்; எனவே, குண்டடிபட்டு மாண்டவர் குடும்பம் எக்கேடு கெட்டால் என்ன என்று இருந்துவிடாமல், இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 3,000 தந்துதவ முன் வந்த பச்சைத் தமிழரின் மனிதப் பண்பே பண்பு—அவருக்குள்ள இரக்க சிந்தை எவருக்கு வரும்?' என்று அவர் புகழ் பாடவும் சிலர் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு முன் வரக்கூடும்.

போலீசு குண்டடியால் உழைக்கத் திறனற்றுப்போனவர்களுக்கும் இந்தப் பச்சைத் தமிழர் ஆட்சியில் ரூ. 1,500 நன்கொடை தரப்படுகிறது; சாதாரண குண்டுகாயம் பட்டவர்களுக்கும்கூட ரூ. 500 உதவி தரப்படுகிறது; இப்படி தாராள புத்தியுடன் உதவி புரிய முன்வரும் பச்சைத் தமிழரல்லாவா மீண்டும் அரியாசனத்தில் அமர வேண்டும்; அந்த அருங்குணவான் அல்லவோ அரசு கட்டிலில் அமருவதற்குத் தகுதி பெற்றிருப்பவர் என்றுங்கூட, எவரைப் பார்த்தோ ஏற்பட்டு இருக்கின்ற அழுக்காறுக்காக, அவரைக் குறித்து ஆதரவாய் பேச முன்வரவும் கூடும்.

ஆனால், உண்மையோ வேறு. சம்பவமே இங்கு நடைபெற்றதல்ல.

நமது பச்சைத் தமிழர் ஆட்சிக்கும் துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தவர் குடும்பத்திற்கு உதவும் அருஞ்செயலுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

பச்சைத் தமிழர் இன்றுள்ள அரியாசனத்தில் ஆச்சாரியார் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த நாளில், கல்லக்குடி தன்மான அறப்போரில் போலீசின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையான வீரத் தியாகிகள் கல்லக்குடி நடராசன்-கேசவன் ஆகிய வீரர்களைப் பெற்றெடுத்த இரு குடும்பங்களுக்கும், முதலமைச்சர் என்ற முறையில் ஆச்சாரியார் உதவ முன்வரவில்லை.

அந்த யாசகம்தரும் அற்பச் செயலை, அவர் இடத்தில் அமர்ந்த பச்சைத் தமிழரும் செய்ய முன்வரவில்லை.

கல்லக்குடி தன்மான அறப்போரில் இறந்தவர்களின் குடும்பத்திற்கே உதவி தர மனமில்லாத பச்சைத் தமிழரா, துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியாகிக் கரமிழந்தவர்களுக்கும் கால் முறிந்தவர்களுக்கும் இல்லற வாழ்விழந்தவர்களுக்கும் பண உதவி செய்ய முன்வருவார்?

இதேபோன்றுதான், தூத்துக்குடியிலும் நால்வரை சுட்டு விழ்த்தியது காங்கிரசு ஆட்சி; பலர் படுகாயமுற்றனர்.

நால்வரைச் சுட்டு விழ்த்தத்தான் இந்தக் காங்கிரசு ஆட்சிக்கு ஆற்றல் இருக்கிறதேயல்லாது, அவர்கள் குடும்பத்திற்கு ஏதாவது பாதுகாப்புத் தேடுவோமே என்ற நல்லறிவு இந்தப் பச்சைத் தமிழருக்கு இல்லவே இல்லை.

தம்மம்பட்டியில் அமைதியாகப் பொதுவேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தோழர்கள் பலரைச் சுட்டுப் படுகாயப்படுத்தினர், முதலமைச்சரான பச்சைத் தமிழர். அவர்களுக்கு ஆறுதல் மொழியும் இல்லை; உபகார நிதியும் தரப்படவில்லை.

ஆனால், பஞ்சாபில் கால்கா என்ற புகைவண்டி நிலையத்தில் வந்து இறங்கிய இரயில்வே பெரிய அதிகாரி ஒருவரிடம் தங்கள் கோரிக்கைகளைத் தந்து, ஆர்ப்பாட்டம் நடத்தினர் அங்குள்ள தொழிலாளர்கள்.

காங்கிரசுஆட்சியின் இயல்புப்படி, அந்தத் தொழிலாளர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதோ, தலைப்பில் குறிப்பிட்டுள்ளது போன்று நஷ்டஈடு தர முன்வந்து இருக்கிறது பஞ்சாப் அரசாங்கம்.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது மே திங்கள் 2-ம் நாளில். ஏறத்தாழ ஒன்பது திங்கள் கழித்து நிதி உதவ முன்வந்து இருக்கிறது பஞ்சாப் அரசாங்கம்!

நல்ல தேர்தல் நேரமாகப் பார்த்து பஞ்சாப் அரசாங்கம், தனது கொடிய அடக்கு முறைக்கு எட்டு மாதங்களுக்கு முன் பலியானவர்களுக்கு நஷ்டஈடுதர முன்வந்து இருக்கிறது!

ஆனால் இங்குள்ள நமது பச்சைத் தமிழரோ, காங்கிரசு ஆட்சியின் கோர அடக்கு முறைக்கு ஆளானவர்களைக் குறித்து கேலி பேசிவருகிறார்— நையாண்டி செய்துகொண்டே மக்கள் ஆதரவைத் தேர்தலில் கோரவும் செய்கிறார்!

பஞ்சாப் காங்கிரசு ஆட்சியினருக்கு இருக்கின்ற மக்கள் பற்றும் இரக்க சிந்தையும்கூட, தமிழ் மக்கள்மீது இந்தப் பச்சைத் தமிழருக்கு இருப்பதாகக் காணோம்.

இப்படி சொந்த மக்கள்மீது பற்று அற்று இருப்பவரையா பச்சைத் தமிழர் என்பது? தமிழ் மக்களின் நலத்தில் அக்கரை அற்றவரையா, தமிழ் மக்கள் ஆதரிப்பது? கூடாது முக்காலும் கூடாது.

பஞ்சாப் அரசாங்கப் போக்கையும் பச்சைத் தமிழர் ஆட்சியின் போக்கையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும், தமிழ் மக்கள். அதன் பிறகு, பச்சைத் தமிழருக்குத் தரவேண்டிய பரிசினை தமிழ் மக்களே தீர்மானித்துக் கொள்ளுவர்.

சூயஸ் பிரச்சினைக்கு இடைக்கால திட்டம்?

மூன்று நாடுகள் முயற்சி?

சூயஸ் கால்வாயை உபயோகிக்கும் நாடுகள் ஒரு இடைக்கால திட்டத்தைத் தயாரித்துள்ளனவாம்.

சூயஸ் சம்பந்தமாக எகிப்துடன் ஒரு இடைக்கால ஒப்பந்தம் செய்துகொள்ள பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் ஐ. நா. செயலாளரிடம் ஒரு பிரேரபணையைத் தெரிவிக்கப்போவதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

கால்வாய் கட்டணங்களை உலக பாங்கியிடம் தரப்படும்; பாதித் தொகை எகிப்து கணக்கில் வரவு வைக்கப்படும் என்பதுதான் அந்த இடைக்கால ஏற்பாடாக இருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறது.

ஈரோடில் கதர் துணிக்குச் சாயமேற்றும் பிரிவாம்!

கதர் துணிக்கு சாயம் ஏற்றும் பிரிவை ஈரோடில் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஆராயப்பட்டு வருகிறதாம்; ஏற்கனவே இம் மாதிரியான ஒரு நிலையம் திருப்பூரில் இருக்கிறது. இந்தப் பிரிவுக்கான சாதனங்களுக்கு ரூ. 2 இலட்சம் தேவைப்படுமாம்.

'சனநாயக உயிர்வதை செய்யும் காங்கிரசை முறியடியுங்கள்'

பொதுமக்களுக்கு அண்ணா வேண்டுகோள்

ஆரணி, பிப். 19—

ஆரணி பிள்ளையார்கோயில் முன், ஆரணி தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நேற்று இரவு தோழர் பா. சு. மணி தலைமையில் நடைபெற்றது.

துவக்கத்தில் தோழர் இரோசு இயக்கப் பாடல்கள் பாடினார்.

தோழர்கள் இராதாமணாளன், ம. பொ. வேதாசலம் ஆகியோர் பேசினர்.

பின்னர், அண்ணா அவர்கள் காங்கிரசாரின் ஐந்தாண்டுத் திட்ட ஓரவஞ்சனை பற்றியும், தென்னாடு வளமற்றதாக ஆக்கப்பட்டிருப்பதை மாற்றாரே கூறுவதை சான்றுகளுடன் விளக்கியும், தடியடிபட்டுச் சிறைசென்று தியாகம்புரிந்த உண்மைக் காங்கிரசார் இன்று காங்கிரசில் இல்லை என்றும், காங்கிரஸ் ஏழைகளின் துயர் துடைக்கும் கட்சி அல்ல என்பதை விளக்கியும், மக்கள் தந்த வாக்குகளையும் மதியாது தேர்தலில் தோற்றவர்களுக்கு பதவி தந்து சனநாயகத்தை உயிர்வதை செய்யும் காங்கிரசாரின் கயமைத்தனத்தையும் எடுத்துக்கூறி, பொதுமக்கள் பொன்னேரி தொகுதிக்கு நிறுத்தப்பட்டுள்ள கழக அபேட்சகர்களை ஆதரித்து ஓட்டளிக்குமாறு வேண்டிக்கொண்டு அரியதோர் கருத்துரை வழங்கினார். (ந. நி.)

வாக்காளர் கவனத்திற்கு!

ஒவ்வொரு மாநிலத்திலும் வருகிற தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள், சரிபார்த்துத் திருத்தப்பட்டபின் இறுதியாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தச் சமயத்தில் புதிய பெயர் எதையும் அவைகளில் சேர்க்க முடியாது. ஆனால், சட்டப்படி சில நடைமுறைகளைக் கையாண்டு ரூ. 5 சொற்பக் கட்டணம் செலுத்தி மனுச் செய்தால் வாக்காளராகப் பதிவு செய்வதற்கான மனு கவனிக்கப்படும்.

எனவே, வாக்காளராக இருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் உடனே தமது பெயர் இறுதியான வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்று சரிபார்த்து, இல்லையென்றால் தம் பெயரைச் சேர்த்துக்கொள்ளும்படி அவர் இருக்கும் மாநிலப் பிரதம தேர்தல் அதிகாரிக்கு மேற்குறிப்பிட்ட கட்டணத்துடன் மனுச் செய்துகொள்ளவேண்டும்.

வாக்காளர்கள் பட்டியல்களில் வாக்காளரின் பெயர் அல்லது வயது, விவரம் முதலிய ஏதாவது ஒரு அம்சத்தில் அச்சுப் பிழைகளும் இதர பிழைகளும் சில சமயங்களில் காணப்படுகின்றன. இறுதியான வாக்காளர்கள் பட்டியல்களில் அத்தகைய பிழைகள் இருந்தால், அவைகளை உடனே அந்தப் பகுதி தேர்தல் பதிவு அதிகாரிக்கு தெரிவிக்கவேண்டும். அத்தகைய திருத்தங்களுக்குக் கட்டணம் கிடையாது.

வாக்காளர் வாக்குப் பதிவு செய்யச் சீக்கிரமாகவே வாக்குப் பதிவு நிலையத்திற்குச் செல்வது நல்லது. அப்படிச் செல்லும் வாக்காளர் தம் சொந்த வண்டிகளை உபயோகித்தோ அல்லது நடந்தோ செல்லவேண்டும். எந்த அபேட்சகராவது அல்லது கட்சியாவது அல்லது மற்றொருவராவது தருகிற மோட்டார் வண்டி முதலிய வண்டிகளில் வாக்காளர் ஏறிச்சென்று வாக்குப் போடச் செல்வது, தேர்தல் சட்டப்படி குற்றமாகும். இரண்டு குடும்பங்கள் சேர்ந்து ஒரே வண்டியில் செல்வதாயிருந்தால்கூட, அதற்கு அவை தனித்தனிக் கட்டணம் சேர்த்துச் செலுத்தியிருந்தாலன்றி போகக்கூடாது. ஒரு வாக்காளர் மற்றொரு வாக்காளரை அல்லது அவரது குடும்பத்தைத் தம் வண்டியில் ஏற்றிச் செல்ல முனவரக்கூடாது.

முதலாவதாக ஒரு வாக்காளர் தம்மை ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்து கொள்ளக்கூடாது. அவர் எந்த சந்தர்ப்பத்திலும் தமது வாக்குரிமையை எந்த வித பிரதி பிரயோசனத்துக்கும் விற்றுவிடக்கூடாது. அதேபோல் வாக்காளர் ஒருவர், இன்னொருவரை அச்சுறுத்தவோ, செல்வாக்கை துஷ்பிரயோகம் செய்வதோ கூடாது. அது, தேர்தல் சட்டப்படி குற்றமாகும். பதிவு நிலையங்களில் ஒரு வாக்காளர் மற்றொரு வாக்காளராக ஆள்மாறாட்டம் செய்யக் கூடாது; அல்லது இரட்டிப்பாக வாக்குச் செய்ய முயற்சி செய்யக்கூடாது. ஆள்மாறாட்டம் செய்வது கிரிமினல் குற்றமாகும். அதற்குத் தரப்படும் தண்டனை கடுமையானதாக இருக்கும்.

மேலும், யாரும் வோட்டு இரகசியத்தை வெளிப்படுத்தவும்கூடாது. அவ்வாறு செய்வோருக்கு ஏறத்தாழ மூன்று மாத காவல் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

போரில் பேரழிவு

தடுப்பதற்குப் புதிய திட்டம்

மாஸ்கோ, பிப். 20—

ரஷ்யாவில் தொழிற்சாலைகளையெல்லாம் நாடெங்கிலும் பரவலாக நிறுவுவது என்று முடிவு செய்து, அத்திட்டம் இந்த ஆண்டு முதலே துவக்கப்பட இருக்கிறதாம்.

இப்படிச் செய்வதால், போர்க்காலங்களில் எதிரிகளின் அணுகுண்டுத் தாக்குதல்கள் போன்றவை நேரிடும்போது, ஒரே இடத்தில் தொழிற்சாலைகளைக் கட்டிக் குவித்து வைத்திருக்கும் பிரிட்டன் போன்ற நாடுகளில் ஏற்படும் அளவுக்குச் சேதம் ஏற்படுவதற்கில்லையாம்!

கோவையில் மருத்துவக் கல்லூரி ஏற்படும்?

கோவை, பிப். 17—

சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவையொட்டி இங்கு நடைபெற்ற கண் காட்சியில் பேசுகையில், 'கோவையில் ஒரு மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான, ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது,' என்று மாவட்ட கலெக்டர் சோசப் தெரிவித்துள்ளார்.

திருச்செங்கோடு ஊராண்மைக் கழகத்தில் அண்ணா அவர்கட்கு வரவேற்பு

திருச்செங்கோடு, பிப். 18—

கடந்த 17-ந் தேதியன்று திருச்செங்கோடு ஊராண்மைக் கழகத்தின் சார்பில் அண்ணா அவர்களுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. பி. நடேசன் அவர்கள் வரவேற்பிதழ் ஒன்று வாசித்தளித்தார்.

அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தமிழின் இனிமை குறித்தும் அதன் மறுமலர்ச்சி பற்றியும் கருத்து மிக்க உரையாற்றினார்.

கட்சிப் பாகுபாடின்றி ஊராண்மைக் கழகத்தினர் தனக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

திரு. அ. சண்முகசுந்தரம் அவர்கள் நன்றி நவின்றார்!

வரவேற்புக் கூட்டத்திற்கு நகரப் பிரமுகர்களும் பொதுமக்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது. (ந. நி.)

பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு

முதல் கட்டம்

சென்னை, பிப். 19—

வருகிறமாதம் (மார்ச்) 1-ந் தேதியன்று சென்னை மாநிலத்தில், 40 சட்டசபைத் தொகுதிகளிலும், எட்டு பாராளுமன்றத் தொகுதிகளிலும் வாக்குப் பதிவுகள் நடைபெறும்.

இந்தத் தொகுதிகளில் மட்டும் 17,40,516 பெண்கள் உட்பட மொத்தம் 34,15,088 வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வார்கள்.

வாக்குப் பதிவு நடைபெறும் பாராளுமன்றத் தொகுதிகளும் அவற்றுள் அடங்கிய சட்டசபைத் தொகுதிகளின் விவரமும் கீழே தரப்பட்டிருக்கிறது :—

1. திருவண்ணாமலை: — ஆரணி, போளூர், துரிஞ்சாபுரம் திருவண்ணாமலை.
2. திருச்செங்கோடு :— தாரமங்கலம், மேட்டூர், சங்கரி, திருச்செங்கோடு.
3. திண்டிவனம் :— சத்தியமங்கலம், செஞ்சி, திண்டிவனம், வளவனூர்.
4. கும்பகோணம் :—ஆடுதுறை, கும்பகோணம், மாபனசம், திருவையாறு.
5. புதுக்கோட்டை :— திருமயம், ஆலங்குடி, திருக்கோட்டியூர், காரைக்குடி.
6. தென்காசி :— அம்பாசமுத்திரம், கடையம், தென்காசி, சங்கரநயினார்கோவில்.
7. பெரியகுளம் :— உத்தமபாளையம், போடிநாயக்கனூர், கோடைக்கானல், தேனி.
8. பொள்ளாச்சி :— உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயில்பாளையம், தாராபுரம்.

சென்னையில் வாக்குக் கணக்கெடுப்பு

சென்னை, பிப். 19—

சென்னை நகரத்தில் வாக்குப் பதிவு முடிவுற்றபின் மார்ச் 9-ந் தேதியன்று, தென்சென்னைத் தொகுதிகளின் வாக்குகள் கணக்கெடுப்பு வி. பி. மண்டபத்திலும், வடசென்னை தொகுதிகளின் வாக்குக் கணக்கெடுப்பு செயின்ட் மேரீஸ் மண்டபத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

முதலில் தென்சென்னையின் பதிவான வாக்குக் கணக்கெடுப்பு நடைபெறும் என்றும், இது 4-நாட்கள் எண்ணப்படும் என்றும், அதன் பின்னரே வடசென்னை வாக்குகள் கணக்கெடுக்கப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் பாராளுமன்றத் தொகுதிகளுக்கு மொத்தம் 4,292 வாக்குப் பெட்டிகளும் சட்டசபைத் தொகுதிகளுக்கு மொத்தம் 5,838 வாக்குப் பெட்டிகளும் வைக்கப்பட்டிருக்குமாம்.

மார்ச். 10-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபோதிலும் கூட, அன்றும் வாக்குக் கணக்கெடுப்பு நடைபெறும் என்று நகரசபைக் கமிஷனர் அறிவித்திருக்கிறார்.

விற்பதற்குத் திட்டம்?

கொழும்பு, பிப். 18—

தென்னிந்தியாவில் இலங்கை சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கும் பிரயாணிகள் சுகாதாரப் பாதுகாப்பு இடங்களான தட்டப்பாறை, மண்டபம் ஆகிய இரண்டு இடங்களையும் தங்களுக்கு விற்றுவிடுமாறு இந்திய சர்க்கார், கடந்த 1954-ல் இலங்கை சர்க்காரைக் கேட்டுக்கொண்டது.

அதன்படி இப்போது இவைகளை இந்திய சர்க்காருக்கே விற்றுவிடலாமா என்று இலங்கை சர்க்கார் யோசனை செய்துவருவதாகவும், தட்டப்பாறை முகாமை ரூ. 4,30,000-க்கு விற்க திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது.

பஞ்சசீலப் பண்டிதர்கள் ஆட்சியில்!

அநியாயம் : அநீதி : அக்கிரமம்

ஆனந்த நடனம் ஆடுகிறது • 'மோகனம்' பாடுகிறது • கோரத் தாண்டவம் புரிகிறது

★

'இந்தியை எவர்மீதும் திணிக்கமாட்டோம்'

என்று உறுதிமொழி தருகின்றனர்

வஞ்சகர்கள்

★

ஆனால்......!

புனிதமான அரசியல் சட்டம்

அது புகலிடமளித்துக் காப்பாற்றிவரும்
வடவரின் ஏகாதிபத்திய வெறியால்

அநியாயமாகக் கற்பழிக்கப்படுகிறது!

★

1. யூனியன் ஆட்சிமொழியாக இந்திமொழி தேவநாகிரி லிபியில் இருக்கும்.

   யூனியனின் அரசாங்கக் காரியங்களுக்கு உபயோகிக்கப்படும் இலக்கங்கள் சர்வதேச முறை இந்திய இலக்கங்களாயிருக்கும்.

2. முதலாவது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதன்னியில் (1) இந்த அரசியல் சட்டம் துவங்குவதிலிருந்து பதினைந்து ஆண்டுக் காலத்திற்கு, இந்தச் சட்டம் அமுலாகத் துவங்குவதற்கு முன்புவரை எந்த அரசாங்கக் காரியங்களுக்கெல்லாம் ஆங்கிலம் உபயோகிக்கப்பட்டு வந்ததோ அந்த அரசாங்கக் காரியங்களுக்கெல்லாம் ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்படவேண்டும்.

   வேண்டுமானால் குடியரசுத் தலைவர் மேற்குறிப்பிட்ட காலத்தில், ஏதாவது அரசாங்கக் காரியங்களுக்கு ஆங்கில மொழியுடன் இந்தி மொழியையும், சர்வதேசமுறை இலக்கங்களுடன் தேவநாகிரி இலக்கங்களையும் உபயோகிக்கலாம் என உத்தரவு மூலம் அதிகாரமளிக்கலாம்.

—இவை இந்திய அரசியல் சட்ட 343-வது விதியின் முதல் இரு பிரிவுகள்.

★

இந்த விதி

அகில இந்திய வெறியர்களால்

மூர்க்கத்தனமாக மீறப்பட்டிருப்பதை

தமிழ் நாட்டில் வழங்கப்படும் தபால் கார்டுகள்—
அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள இந்தி எழுத்துக்கள்

நிரூபிக்கின்றன!

★

இந்தித் திணிப்பு தீவிரமாகி வருகிறது!

நியாயம்! : நீதி! : நேர்மை!

கோவெனக் கதறுகிறது! • கண்ணீர் சிந்துகிறது! • வாய்விட்டு அழுகிறது!

★

வடவரின் இந்த ஏகாதிபத்திய வெறியாட்டத்திற்குக்
கொட்டுமேளம் கொட்டுகின்றனர்—பூசை போடுகின்றனர்

எல்லா அகில இந்தியக் கட்சிகளின்

தமிழ்நாட்டு தாசர்களும்!

★

வாக்காளர் பெருமக்களே!

தாய்மொழியைக் காவு கொடுக்கும்

ஏகாதிபத்திய தாசர்களுக்கா உங்கள் வாக்கு?

★

தமிழ் அரசோச்ச! இந்தி ஆதிக்கம் ஒழியப் போராடும்

தி. மு. க. அபேட்சகர்களுக்கே

வாக்களியுங்கள்

சென்னை-பூங்கா நகரில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம்

கழக முன்னணி வீரர்கள் கருத்துரை

சென்னை, பிப். 18—

தென்சென்னை பாராளுமன்றத் தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் தோழர் **பி. பாலசுப்பிரமணியம்** அவர்களையும், எழும்பூர் சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் தோழர் **க. அன்பழகன்** அவர்களையும் ஆதரித்து, சென்னை 28-வது வட்டத் தி. மு. கழக ஆதரவாளர்கள் சார்பில் நேற்று மாலை மெமோரியல் ஹால் தெருவில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் **கே. எம். மணி** தலைமையில் நடைபெற்றது.

துவக்கத்தில் தோழர் **தங்கமணி** இரண்டொரு இயக்கப் பாடல்கள் பாடினார்.

தலைவர் துவக்கவுரைக்குப் பின் தோழர் **கோ. செங்குட்டுவன்** அவர்கள், நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதே தி. மு. கழக அபேட்சகர்களின் இலட்சியம் என்று எடுத்துக் கூறி சிறிது நேரம் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, தோழர் **ந. செயராம்** அவர்கள், காங்கிரசார் 'இந்த நாட்டு மக்களுக்கு வாக்குரிமை அளித்தோம்' என்று கூறுகிறார்களே தவிர உண்மையில் அதனால் மக்களுக்கு ஒருவித நன்மையும் ஏற்பட்டு விடவில்லையென்றும், இன்னும் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டுவிட்டு இறுதியில், 'ஒரு கட்சிக்கு இருந்து தீரவேண்டிய மூன்று முக்கிய அம்சங்களான தெளிவான பாதையும், திட்டவட்டமான கொள்கையும், மக்கள் ஆதரவும் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

அடுத்து தோழர் **இராசமாணிக்கம்** பலதிறப்பட்ட தொழிலாளர்களுக்கும் எந்த நேரமும் பாடுபடத் தயாராக இருக்கிற தி. மு. கழகத்திற்கு பொதுமக்கள் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து தோழியர் **சத்தியவாணிமுத்து** அவர்கள் சிறிது நேரம் பேசினபின், தோழர் **மணி** கழகத்தின்மீது மாற்றார் ஏவிவரும் தவறான பிரச்சாரங்களைக் கண்டித்துப் பேசினார். பின்னர் தோழர் **பி. பாலசுப்பிரமணியம்** சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசினார் (சொற்பொழிவு நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது).

அடுத்து, தோழர் இராசன் அவர்கள், தி. மு. கழகம் நாட்டு மக்களுக்குச் செய்த நன்மைகளையும் காங்கிரஸ் இழைத்த துரோகங்களையும் சுட்டிக்காட்டி தேர்தலில் கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்,

பின்னர் தோழர் கே.கோவிந்தசாமி அவர்கள், சாதி, மத, பேதமின்றி மக்களுக்காகப் பாடுபடும் இயக்கம் தி. மு. கழகம் என்பதை விளக்கிக் கூறினார்.

அடுத்து, தோழர் **அன்புமணி** அவர்கள் சிறிது நேரம் பேசினபின் இறுதியாகத் தோழர் **அன்பழகன்** அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி நவிலப்பட்டு, இரவு 10 மணியளவில் கூட்டம் முடிவடைந்தது. (ந, கி.)

முதலாளிகள் தயாரித்த 'எலிப் பொறி'யாம்!

லண்டன், பிப். 19—

"மத்தியக் கிழக்குப் பிரச்சினைகள் சம்பந்தமாக அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் வெளியிட்டுள்ள திட்டம், காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு வீசப்பட்டுள்ள வலை என்றும், அமெரிக்க எண்ணெய் கம்பெனி முதலாளிகளால் தயாரித்துள்ள ஒரு 'குடியேற்ற எலிப் பொறி' என்றும் சோவியத் பிரதமர் புல்கானின் வருணித்திருக்கிறார்,

ஆசிரியருக்குக் கடிதம்:

இந்திமொழி வெறியில் கம்யூனிஸ்டுகள் சளைத்தவர்கள் அல்லர்

தமிழ்நாட்டு தாசர்கள் மௌனம் சாதிப்பது ஏன்?

ஐயா,

"நான் இந்தி மொழியை விடுத்து, ஒரு அன்னிய மொழியில் உங்களிடம் பேசுவதற்காக வருந்துகிறேன், உங்களிடம் இந்த நாட்டின் தேசிய மொழியான இந்தியில் பேசத்தான் எனக்கு ஆவல்; ஆனால் தென்னாட்டவர் அந்த மொழியைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாலேயே நான் அன்னிய மொழியில் பேசுகிறேன். இன்னும் சிறிது நாளில் இந்த நிலை மாறிவிடும் என நம்புகிறேன்,"

என்று, கடந்த 16--2--57 அன்று இங்கு பேசிய அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி பொதுச் செயலாளர் அஜாய்கோஷ் ஆங்கிலத்தில் குறிப்பிட்டார்.

இந்தி மொழி வெறிகொண்ட எந்த அகில இந்தியக் கட்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி சளைத்தது அல்ல என்பதை அஜாய் கோஷின் கூற்று தெளிவாக்குகிறது. இவரது கூற்று பற்றி தென்னாட்டவருக்குக் கவலை இல்லை. ஏனெனில் இவரும் ஒரு வடநாட்டவர் தானே! ஆனால், கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையும், அதன் தலைவர்களும் இந்தி பற்றிய தங்களின் கருத்தை, கொள்கையைத் தெளிவாக்காமல் வாய்மூடி மௌனிகளாயிருப்பதேன்?

"இன்னுமொரு உண்மையும் அஜாய் கோஷின் பேச்சிலிருந்து உறுதி செய்யப்பட்டிருக்கிறது; 'இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மற்ற வடநாட்டவர் இந்தியைப் புரிந்துகொள்ளுகிறார்கள்; ஆனால் தென்னாட்டவர் புரிந்துகொள்ள முடியவில்லை' என்பதுதான் அந்த உண்மை. அது மட்டுமல்ல; கன்னடத் தலைநகரில் பேசிய அவர், இந்த மாநிலத்தை மட்டும் குறிக்காமல், பொதுவாகத் தென்னாட்டவர் என்று குறிப்பிட்டிருக்கிறார்; அந்தத் தென்னாட்டவர் யார்? தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடியர் ஆகியோர் தானே? இந்தத் தென்னாட்டவரின் மொழியமைப்பு மூலம் வேறு—வடநாட்டவரின் மொழியமைப்பு மூலம் வேறு என்பதை அஜாய் கோஷ் ஒப்புகிறார் என்பதும், அவரது கூற்றில் தொக்கி நிற்கவில்லையா?

இந்தி மொழி வெறிகொண்ட எந்தக் கட்சிக்கும், கம்யூனிஸ்டுக் கட்சி சளைத்ததல்ல என்பதை வாக்காளர்கள் உணரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இரே. குமார்
பெங்களூர் : 19-2-57

தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக்காலட்சேபம்

23-2-57 மாலை 6-மணிக்கு சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை முல்லா சாயபு தெருவில், திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகச்சார்பில் தோழர் டி- ஜெயசுந்தர பாகவதர் அவர்களால் 'தேர்தலில் நாம்' என்ற காலட்சேப இசை நிகழ்ச்சி பக்கவாத்தியங்களுடன் நடைபெறும். கழக அபேட்சகர் என். வி. நடராசன் அவர்களும் மற்றத் தோழர்களும் கலந்துகொள்வர்.

மக்களுடைய மனநிலையை காமராசர் உணருவாரா?

பிரச்சாரப் படம் பாதியில் நிறுத்தப்பட்டது!

பொள்ளாச்சி, பிப். 21—

உடுமலைப்பேட்டை காங்கிரஸ் ஆதரவாளர்களின் சினிமா கொட்டகையில் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரப்படம் காட்டப்பட்டு பாதியிலேயே நிறுத்திக்கொண்ட பரிதாபச்சம்பவத்தைப் பற்றிய தகவல் ஒன்று தரப்பட்டிருக்கிறது.

'நமது கடமை' என்ற பெயருடைய அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அதில் எதிர்க்கட்சிகளைத் தரக்குறைவாகத் தாக்கி, 'காங்கிரசுக்கே ஓட்டுப்போடுங்கள்,' என பிரச்சாரம் வருவதைக் கண்டவுடன், பெருந்திரளாக மக்கள் எழுந்து, 'படத்தைக் காட்டாதே; நிறுத்து!' என்று சத்தமிட்டிருக்கிறார்கள். அப்போதும் நிறுத்தாமல் தொடர்ந்து படம்காட்டப்படவே பொதுமக்கள், படம் காட்டுவோர் அறைக்குள்ளேயே சென்றுவிட்டிருக்கின்றன!

மக்கள் கொதித்தெழுந்துவிட்டதைக் கண்டுவிட்ட கொட்டகை முதலாளி பணிந்துவிட்டுக் கொடுத்து, காங்கிரஸ் பிரச்சாரப் படத்தை பாதியிலேயே நிறுத்திவிட்டார் என்று தெரியவருகிறது.

'காங்கிரசை ஆதரிப்பதில்லை'

அறந்தாங்கி தொகுதி திராவிட கழகங்கள் முடிவு

நடைபெற இருக்கும் சட்டசபைத் தேர்தலில் அறந்தாங்கித் தொகுதி காங்கிரஸ் அபேட்சகரை ஆதரிப்பதில்லை என, அறந்தாங்கித் தொகுதியில் உள்ள ஆயிங்குடி வல்லவாரி, அரசர்குளம், மூக்குடி, அறந்தாங்கி ஆகிய ஊர் திராவிட கழகங்களும், நாவணிவாயல், குருந்திரைக் கோட்டை, ரெத்தினக்கோட்டை ஆகிய ஊர் திராவிட கழகங்களின் மெஜாரிட்டி உறுப்பினர்களும் முடிவு செய்திருப்பதாக அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

இந்தியாவிற்கு 30,000 கோழிக் குஞ்சுகள்!

அமெரிக்காவிலிருந்து வந்திருக்கின்றனவாம்

புதுடில்லி, பிப். 17—

மொத்தம் சுமார் 30,000 கோழிக் குஞ்சுகளும், குஞ்சு பொறிப்பதற்காக 24 பெட்டிகள் நிறைய முட்டைகளும் விசேட விமானமொன்றில் நியார்க்கிலிருந்து புதுடில்லிக்கு வந்துசேர்ந்துள்ளதாம்.

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள கோழி வகைகள் அபிருத்தித் திட்டத்துக்கு, தொழில் நுட்ப உதவியின் ஒரு பகுதியாக இவை அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

கொஞ்சமுங்கூடப் பொருந்தாதாம்!

"மார்க்சிச நூல்களைப் படிப்பது நல்லதுதான். ஏனென்றால் அவை உலகில் பெரும் பகுதியைக் கவர்ந்துள்ளன. ஆனால் இந்தியாவிற்கு அவை கொஞ்சங்கூடப் பொருந்தாது,"

என்று, நேரு பண்டிதர் ஜோத்பூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டாராம்!

'விடுதலை'க்கு மறுப்பு

நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் காங்கிரஸ் அமைச்சர்கள் காமராசர், டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோருக்கு கருப்புக்கொடி காட்ட முயன்றதாக இருவர் 11-2-57,ல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று 16-2-57 'விடுதலை' இதழ் தலையங்கம் எழுதியிருக்கிறது.

இது அப்பட்டமான பொய்யாகும். மேற்படி இரு தோழர்களும் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதும் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும் கடையநல்லூர் பொதுமக்கள் அறிந்த செய்தியாகும்.

பொய்மூட்டைகளின் மொத்த வியாபாரிகளான காங்கிரசாரை ஆதரிக்கத் துணிந்துள்ள 'விடுதலை'யின் இந்தச் செயல் அதனுடைய வழக்கமான ஒன்றாகவே நமக்குத் தெரிகிறது.

தாமரை
கடையநல்லூர்

மறைவு

விழுப்புரம், பிப். 22—

முன்னாள் விழுப்புரம் நகர் மன்றத் தலைவரும், விழுப்புரம் தொகுதி தி. மு. கழக அபேட்சகருமான தோழர் எம். சண்முகம் அவர்களின் துணைவியார் தையநாயகி அவர்கள் 17-2-57 இரவு திடீரென மாரடைப்பினால் இயற்கையெய்தினர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறுநாள் பிற்பகல் 3 மணிக்கு சவஅடக்கம் செய்யப்பட்டது; பிரேத அடக்கத்தில் நகர் மன்றத் தலைவர் டி. கோண்டா அவர்கள் துணைத் தலைவர் டாக்டர் டி. தியாகராசன், வக்கீல், வீரராகவன் மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும், ஊர்ப்பிரமுகர்களும் கலந்து கொண்டனர். நகர் மன்றப் பள்ளிகள் அனைத்திற்கும் அரைநாள் விடுமுறை அளிக்கப்பட்டது.

தேர்தல் சூழ்நிலையில் தம் அருமைத் துணைவியாரை இழந்து வாடும் தோழர் எம். சண்முகம் அவர்கட்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு		ரூ. அ. பை
18—1—57 இதழ்ப்படி	...	48,751—2—1
கே. நடராசன், 12, பப்பலோ ரோட், சிங்கப்பூர்	...	14—0—0
வெள்ளைச்சாமி, வளையல் வியாபாரம், சேக்கல் முடி பசார், ஹார்டிப்பெட்	...	2—0—0
எம். இராமச்சந்திரன், அந்தமான்	...	9—0—0
கௌரி புராடக்ட்ஸ் சுருட்டு வியாபாரிகள், சென்னை	...	11—0—0
வ. வீரபத்திரப்பிள்ளை, அரியலூர்	...	1—0—0
புதுப்பாளையம் தி. மு. கழகக் கூட்டம் இரெ. இளம்வழுதி மூலம்	...	21—0—0
கு. நடராசு, கோவை	...	6—0—0
சி. டி. தண்டபாணி மூலம், கோவை	...	50—0—0
இரா. இளமுருகு, தி. மு. க. முருகூர்	...	5—0—0
தோழர் மு. கருணாநிதி மூலம் :—		
கோவை நகர தி. மு. க.	...	364—0—0
ஒண்டிப்புதூர் சிறப்புக்கூட்டம்	...	101—0—0
இராமநாதபுரம் கூட்டம்	...	100—0—0
பீளமேடு தி. மு. கழகம்	...	50—0—0
திரு. வி. க. மன்றம்	...	5—0—0
சிங்கநல்லூர் தி. மு. கழகம்	...	30—0—0
தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். எஸ். இராசேந்திரன் மூலம் :		
புதுக்கோட்டை சிறப்புக் கூட்டம்	...	683—6—9
தஞ்சை கலைப்பூங்கா	...	200—0—0
கடலூரில் புதுவை கிளைக் கழகம்	...	100—0—0
ஏ. வி. இராமசாமி	...	85—0—0
சு. தொ. ஆறுமுகம், தி. மு. க., மேலூர்-மதுரை	...	10—0—0
கே. இராமசாமி, ஏழுமலை-மதுரை	...	1-12—0
தி. மு. க., வடுகப்பட்டி—பெரியகுளம்	...	10—0—0
ஏ. கோவிந்தசாமி, பகுத்தறிவு மன்றம், பெரியகுப்பம்—திருவள்ளூர்	...	1—0—0
திராவிட இளைஞர் மன்றம்: தொடையூரில் நடைபெற்ற விளையாட்டு விழாவில்	...	5—0—0
எ. எம். பெரியசாமி, தங்கசாலை, சென்னை	...	2—0—0
ஆக மொத்தம் ரூ.		50,618-4-10

தேர்தல் கூட்டங்கள்

★

கோட்டாரக்குடி :

22—2—57 மாலை 6 மணிக்கு, நன்னிலம் தொகுதி கோட்டாரக்குடியில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், குழந்தை ஆகியோர் பேசுவர்.

திருவாரூர் :

22—2—57 இரவு 8 மணிக்கு, திருவாரூர் தெற்கு வீதியில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் - கி. மனோகரன், குழந்தை ஆகியோர் பேசுவர்.

நன்னிலம் :

23—2—57 மாலை 6 மணிக்கு, நன்னிலம் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், குழந்தை ஆகியோர் பேசுவர்.

மருங்கூர் :

23—2—57 இரவு 8 மணிக்கு, மருங்கூர் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், குழந்தை ஆகியோர் பேசுவர்.

சென்னை மருந்துவர் சார்பில்

தி. மு. க. தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

22-2-57 மாலை 6-மணிக்கு சென்னை மருத்துவர் சார்பில், 30-வது வட்டம் சிந்தாதிரிப்பேட்டை தர்மராசா கோயில் பின்புறத்தில், தோழர் அ.பொ. அரசு எம்.சி., தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், டி.கே. சீனிவாசன், க. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

'கட்சிப் பற்றற்று நடந்துகொள்க'

அரசாங்க ஊழியர்களுக்கு கட்டளை

"இந்திய அரசாங்கத் துறைகளில் பணியாற்றும் அனைவரும் பிரதம தேர்தல் அதிகாரி விடுத்துள்ள விதிமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்"

என்று, மத்திய சர்க்கார் உள்நாட்டு விவகார இலாகாவினரால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனராம்.

சர்க்கார் ஊழியர்கள் அனைவரும், கட்சி பேதமின்றி நடந்துகொள்பவர்கள் என்று தங்களை பொதுமக்கள் நம்பும் வகையில் நடந்துகொள்ள வேண்டுமாறு, எல்லா மாநில சர்க்கார் பிரதம செயலாளர்களையும் பிரதம தேர்தல் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளாராம்.

இந்த விதி முறைகளுக்கு முரணாகச் செய்யப்படும் எந்த ஒரு நடவடிக்கையும், தவறான — ஒழுக்கக்கேடான செய்கை என்று நினைத்து, சர்க்கார் அவர்களுக்குத் தண்டனை வழங்கும்.

போட்டியிலிருந்து விலகக் கடைசி நாள்

சென்னையில் பிப். 26.

சென்னை நகரத்தில் வாக்குப் பதிவு நடைபெறும் நாள் மார்ச் 8; எனவே, தேர்தல்களில் போட்டியிடுவதினின்றும் 'ரிடையர்' ஆகிக் கொள்வதற்கான கடைசி நாள் இத்திங்கள் 26-ந் தேதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.